# சுடர்

மாத இதழ்

22

நவ.15 - டிச.1
1982
35 காசு





FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# ஏசியாட் பிட்ஸ்

☐ ஏசியாட் தொடங்குவதற்கு சில மாதங்கள் முன்பே டில்லியில், நியாய விலைக் கடைகளின் முன்பு பாம்பு போன்ற நீண்ட க்யூவரிசைகள்: எங்கே அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் போய் விடுமோ, அல்லது விலை எறிவிடுமோ என்று மக்கள் அஞ்சத் தொடங்கி விட்டார்கள்.

☐ மக்கள் பயந்தபடி முட்டை விலை 90 காசு ஆகவிருக்கிறது. கிலோ ரு 2.50-க்கு கிடைத்து வந்த கோதுமை கிலோ ரு 5, 6 வரை ஏறக்கூடும். அதே மாதிரி கிலோ ரு 18.20க்கு விற்ற ஆட்டுக்கறி, ரு 26.30 க்கு விற்கவிருக்கிறது சர்க்கரை விலை கிலோவுக்கு ரு 4 வரை ஏறக்கூடும் நல்ல அரிசி விலை ரு 12 ஐ எட்டவிருக்கிறது.
பதுக்கல் காரர்களும் டில்லியில் விளையாடுகிறார்கள்.

☐ 5000 விளையாட்டு வீரர்களுக்கு காலை உணவிற்கு. ஒரு வேளைக்கு மட்டும் 20,000 முட்டைகள், 10,000 லிட்டர் பால், 20,000 ரொட்டித் துண்டுகள், 1256 கிலோ கோழிக்கறி அல்லது 1500 கிலோ ஆட்டுக்கறி தேவை.



☐ டில்லிக்கருகே வாங்கப்பட்ட காம்பா கோலா பானம் இது. (பாட்டில் தயாரிப்பு: டாஜ்பிவரேஜ், 395 அதோனி, ஆக்ரா) இன்னும் மூடி உடைக்காத பாட்டிலில் ஈ மிதக்கிறது. இந்த காம்பா கோலா தான் ஆசியாட்-82 இன் அங்கீகரிக்கப்பட்ட பானம்! நமது மானம் கப்பல் ஏறாமல் இருக்க வேண்டுமே

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010



**தெருக்குரல்**

கற்க, கசடறக்
கற்பவை கற்றபின் நிற்க-
என்றார் வள்ளுவர்
நாங்கள் நின்று கொண்டே
யிருக்கிறோம்
எங்களுக் கொரு வேலை
கொடுத்து
உட்கார வைப்பார் யார்?

—கே. தீபன்

**எதிர் பார்ப்பு**

துச்சாதனன் துகிலுரித்த
போது
கண்ணன் வந்தான்
ஸ்ரீகாந்த் துகிலுரித்த போது
ஜெய்சங்கர் வந்தார்
யார் வரவை எதிர்பார்த்து
இந்த ஓவியர்கள்
துகிலுரிக்கிறார்கள்.

—ஜி. பாலச்சந்தர்

**விவாக சந்தையில்**

அன்று லட்சணமுள்ள
பெண்ணாகத் தேடினார்கள்
இன்று லட்சமுள்ள
பெண்ணாகத் தேடுகிறார்-
கள்
நாளையாவது லட்சிய
முள்ள
பெண்ணாகத் தேடுவீர்களா
ஓ...இளைஞர்களே...

—பாரதிப்ரியா

**'சிலை வைக்கும் கலை'**



அச்சச்சோ...
மானுடமே!
பொட்டு வைத்து
பூவைத்து
நட்டு வைத்த
சிலைகள் போதும்
இனி
சிலை வைக்கும்
கலையொழித்து
ஆக்கமான சிந்தனைகள்
தேக்குவீர் மனதினிலே

—சாமி

**சாலைகள்**

எப்போதாவது
மந்திரிகளின்
பார்வை பட்டு
விமோசனம்
பெறும்
நற்கால
அகலிகைகள்.

—வலங்கை
தமிழ்வேந்தன்



சென்னையின் நெரிசல் நிறைந்த அண்ணாசாலையில் இப்படியொரு காட்சி! இந்தப்பெண் காதிலே இயர் போன் -மாட்டிக்கொண்டு, வாக்மென் டேப்ரிகார்டரில் ஸ்டீரியோ இசையை மெய்மறந்து ரசித்துக்கொண்டு சாலை உணர்வின்றி செல்கிறார். பின்னால் காரில் வந்துகொண்டிருந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சிறப்பு எழுத்தாளர் ஹாரிமில்லர் பலமாக ஹார்ன் ஒலி எழுப்பியவுடன் திடுக்கிட்டு தாறுமாறாக ஓடி, மில்லரின் திறமையான பிரேக்கால் உயிர்தப்பியிருக்கிறார்.

இதுவே வேகமான லாரியாக-பஸ்ஸாக இருந்திருந்தால், இந்த அழகிய பெண் சாலையில் சவமாகியிருக்கக்கூடும். இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது நம் அரசியல் வாதிகள் நினைவு வரவில்லையா? மக்கள் நலனை கவனிப்பதை விட்டு, மெய்மறந்து பதவி சுகம் அனுபவிப்பது எவ்வளவு ஆபத்தானது. எத்தனை நாட்கள் இவர்களும் விபத்தைத் தடுக்க முடியும்?



FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# நண்பர்களே! சென்னை - 600040

மாதந்தோறும் மடல் விடுங்கள் என்று கேட்கும் நூற்றுக்கணக்கான அன்புக் கடிதங்களின் வேண்டுக் கோள்களுக்கு இது பதிலாக அமைகிறது.

மாதா மாதம் அடுத்த இதழுக்குரிய செய்திகளைத் தேடிப் பிடிப்பதிலும், உரிய காலத்தில் இதழைக் கொணர்வதிலும் பல நெருக்கடிகளுடன் எதிர்நீச்சல் போடும் நிலையில்—காலப்பஞ்சத்தில்—குறைவான ஆள் பலத்தில், ஒவ்வொரு கடிதங்களுக்கும் விளக்கமான பதில் போட முடிவதில்லை. புரிந்து கொள்வீர்களல்லவா? எனினும் நீங்கள் எழுதுவதை மட்டும் நிறுத்த வேண்டாம். ஒவ்வொரு கடிதமும், (ஏன் வெளியிட முடியாத உங்கள் படைப்புகளும் கூட!) எங்களால் படிக்கப் படுகிறது சிந்திக்கப் படுகிறது, எங்களை சரிபார்த்துக்கொள்ள, திருத்திக்கொள்ள, உற்சாகப் படுத்திக்கொள்ள மிகவும் பயன்படுகிறது. உங்கள் ஒவ்வொரு கடிதமும் எங்களுக்கு முக்கியமானது தான்! அந்த நிறைவோடு நீங்கள் இருப்பீர்களல்லவா?

முக்கிய செய்தி. தவிர்க்க முடியாதபடி சுட்டி விலையை 14 மாதங்களுக்குப்பிறகு உயர்த்தியே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 14 மாதங்களில் பலமுறை அடக்க விலையை விடக் குறைவான விலைக்குக் கொடுத்து வந்திருக்கிறோம். இதற்கு மேலும் இது சாத்தியமாக இல்லை. எனவே ஜனவரி இதழ் 50 காசு ஆகிறது. இந்த விலையேற்றத்தையொட்டி பக்கங்களைச் சிறிதேனும் கூட்ட முடியுமா, அட்டை பக்கத்தை இன்னும் சிறப்பாக்க முடியுமா என்று முயல்கிறோம்.

ஏற்கனவே ரூ 4/ சந்தா செலுத்தியவர்களுக்கு வாக்களித்தபடி 12 இதழ்கள் தொடர்ந்து வரும். இந்த விலையேற்றத்திலும் சந்தாதாரர்களுக்கு மட்டும் தனிச் சலுகையாக சந்தா, அஞ்சலுடன் ரூ 5/ மட்டுமே (50 × 12 = ரூ 6— சலுகை ரூ 1 = ரூ 5.00) உயர்த்தியுள்ளோம்.

சுட்டியின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் வாசகர்களின் பங்கு பிரிக்க முடியாத படி இணைந்துள்ளது என்பதால் இப்பிரச்சனையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்,

புத்தாண்டில் உற்சாகமான விவரங்களுடன், புதிய எழுச்சியுடன் சந்திப்போம்.

பிற உங்களிடமிருந்து

அன்புடன்,
ஆசிரியர் குழு

---

உத்திரப் பிரதேச அரசாங்க டாக்டர்கள் தனியாக சொந்த மருத்துவம் பார்க்க முடியாது எனவே ஒவ்வொரு அரசாங்க டாக்டரும் தலைக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வீதம் இரகசிய நிதி திரட்டினார்கள். சேர்ந்த ரூ 10 லட்சத்தை சுகாதார அமைச்சர் லோகபதி திரிபாதியிடம் (காங்கிரஸ் தலைவர் கமலபதி திரிபாதி மகன்) வழங்கினார்கள். இந்த 'அன்பளிப்'பின் விளைவாக, உடனே அரசு மருத்துவர்கள் சொந்த மருத்துவம் பார்க்கும் தடை நீக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் கூறிய விளக்கம்: எல்லா அரசு மருத்துவர்களும் தனியாக நோயாளிகளை, சட்ட விரோதமாக பார்க்கவே செய்கிறார்கள். எனவே இதற்கு சட்ட அனுமதி தந்து விட்டோம். எப்படி? இப்படியே திருட்டு, கள்ளச்கடத்தல் எல்லாவற்றிற்கும் சட்ட அனுமதி தருவாரோ!

—கரண்ட்

டில்லிக்கு குழந்தைகளுடன் செல்பவர்களுக்கு எச்சரிக்கை! குழந்தைகள் தொலைவது டில்லியில் மிகவும் அதிகரித்து வருகிறது இந்த ஆண்டு ஜுன் வரை மட்டும் 2109 குழந்தைகள் காணாமல் போய் விட்டன.

# நாட்டு நடப்பு

உதய்ப்பூரின் மத்திய கூட்டுறவு வங்கி ரூ 228.96 கடனை வசூலிக்க ரூ 1.11 லட்சம் செலவிட்டிருக்கிறது. எப்படி? கடன் காரர்களைத் தேடிப் பிடித்து, விரட்டி, கடனை வசூலிக்க தனியார் ஜீப்புகளை ஏற்பாடு செய்தது இந்த வங்கி. ஜீப்புகளுக்கு ஓராண்டு வாடகையாக ரூ 71,359 56ம். பெட்ரோல் செலவாக ரூ 40,529 94-ம் செலவானது இவ்வளவு பணம் செலவழித்தும் வசூலான தொகையோ வெறும் இருநூற்று சில்லரை ரூபாய்கள் தான்.

—டைம்ஸ் ஆப் இந்தியா

இப்போதெல்லாம் தொலைக் காட்சி 'தடங்கலுக்கு வருந்தாத' நாளில்லை. மின்சாரத்துறை எல்லா துறைகளுக்கும் அப்பன்! தொலைக்காட்சிஒளிபரப்பில் கூட தன் வேலையைக் காண்பிப்பதால் 1981-82 இல் மட்டும் நாட்டில் 94 மணி நேரம், 4 நிமிடம் நிகழ்ச்சி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மின் தடையால் தொலைக் காட்சி நிலையங்களில 1172 நிகழ்ச்சிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

—டில்லி ரெக்கார்டர்

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# தார்க்குண்டே தாக்கப்பட்டது ஏன்?

சுட்டி மதுரை வாசகர் நேரடி விமர்சனம்

மக்கள் உரிமைக் கழகத்தின் போலீஸார் அத்துமீறல் குறித்த இருவார நிகழ்ச்சியின் இறுதியாக அக்டோபர் 31-ம் தேதி மாலை மதுரையில் கட்டபொம்மன் சிலையிலிருந்து ஒரு மௌன ஊர்வலம் புறப்படத் தயாராக இருந்தது.

முதல் நாளான 30-ம் தேதி போலீஸாரின் அத்து மீறல் சந்தேகக் கேஸ் என்று கணக்கு வழக்கில்லாமல் காசுக்காகவும், வேண்டாதவர்களைப் பழிவாங்குவதற்காகவும் இழுத்துக் கொண்டு போவது, காரணமில்லாமல் சிறையில் அடைத்தல்; அனாவசியத் துன்புறுத்தல் இது போன்ற பல அநியாயங்களை குறித்து கடுமையாக ஒரு பொதுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நகரப் போலீஸார் மிகவும் காட்டமாக இருந்தனர் ஏதடா சாக்கு என்று காத்திருந்தனர். இந்த வேட்டைப் பேர் வழிகளுக்குக் கிடைத்தது தீனி.

ஊர்வலம் புறப்பட கூடியிருந்தது 50 பேர் மட்டுமே. ஆனால் போலீஸாரோ 100 பேர் இருந்தனர் இவர்கள் வேட்டைக்கு தயாராய் இருந்தனர். என்பதற்கு இதுவே சாட்சி

திரு. ஹரி என்ற கழகத்தைச் சார்ந்த புகைப்படக்காரர் கூட்டத்தைப் படமெடுத்தார், போலீஸார் தடுத்தனர். கூட்டத்தைப் புகைப்படமெடுப்பதில் தவறில்லை; அது ஒன்றும் சட்ட விரோதமில்லை என்று திரு. தார்க்குண்டே, மக்கள் உரிமைக் கழகத் தலைவர் கூறினார். போலீஸார் கேட்கவில்லை. போலீஸ் அதிகாரி திடீரென்று தடியடிக்கு உத்தரவிட்டார். கண் மண் தெரியாமல் அடிக்க ஆரம்பித்த போலீஸார் திரு. தார்குண்டே, திரு. பி. வி, பக்தவத்சலம், திரு. ஹரி, திரு. கண்ணபிரான்; இன்னும் பல மதுரை நகர நிர்வாகிகள் ஆகியோரை பிய்த்தெடுத்தனர். கடைசியில் வேனில் ஏற்றி சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

சுதந்திர திருநாட்டில் மக்களின் காவலர்களாக இருக்க வேண்டியவர்கள்; நடத்தும் காட்டு தர்பாரை யார் கேட்பது?

கண் கூடான இந்தப் போலீஸ் அத்து மீறல் நிகழ்ச்சி மதுரை மக்களின் நெஞ்சில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது மட்டும் இனி மாறாத உண்மையாக இருக்கும்.

# தலைமுடிக்குள் ரயில்



மிக நுண்மையான பொருட்களை இப்படிக் கூட தயாரிக்க முடியுமா? என்று பார்ப்போரை வியப்பில் ஆழ்த்துகிறார் ரஷ்ய விஞ்ஞானி நிக்கோலாய் சையத் ராஸ்டி.

மனித ஆற்றலுக்கு எல்லையே இல்லையென்பது போல ஒருநுண்ணிய மின்சார மோட்டார் செய்தார். ஆறு மோட்டார்களைச் சேர்த்தால் ஒரு கன மில்லி மீட்டர் அளவு வரும். இந்த அசல் மோட்டாரை கனடாவில் நடந்த பொருட்காட்சியில் 40,000 முறை விசையைத் தட்டி ஓட்டிக் காண்பித்தார்கள்.

குண்டூசி கொண்டையைவிட 30,000 மடங்கு சிறிய பூட்டு தயாரித்திருக்கிறார், அதற்கு சாவி உண்டு; பூட்டலாம், திறக்கலாம்.

சமீபத்தில் ஒரு மிகச் சிறிய கடிகாரம் தயாரித்தார். அதைத் தங்கத்தால் ஆன தட்டாம்பூச்சியின் கண் துவாரத்தில் பொருத்தி பொருட்காட்சியில் வைத்துள்ளார். இக்கடிகாரத்தில் மணி பார்க்க மைக்ராஸ்கோப் வேண்டும், கடிகாரத்தின் 130 பாகங்கள் ஒரு மில்லி மீட்டரில் 100-இல் ஒரு பாகம் முதல் 1000-இல் ஒரு பாகம் வரை சிறியவை.

இந்த மைக்ரோ டெக்னிக் நிபுணர், மிக நுண்ணிய வெட்டு கருவிகள் வைத்து பெரு விரல் சுட்டு விரல் மட்டும் உபயோகித்து இவற்றைத் தயாரிக்கிறார். நாடித் துடிப்புகளுக்கு இடையே வேலை செய்கிறார். நாடி துடிக்கும்போது வேலை செய்தால் கச்சிதமாக இராதாம்.

இவரைப் போல மைக்கேல் மாஸ்லுக் எனும் ரஷ்யர் ஒரு மிகச்சிறிய ரயில் இன்ஜின் செய்துள்ளார். அதற்கு, புகை போக்கி, லீவர், சக்கரம் போன்ற எல்லா பாகங்களும் உண்டு! தலை மயிரில் உள் துளை இருந்தால், குகையில் நுழைகிறார் போல புகுந்து மறு கோடியில் வந்துவிடக்கூடிய அளவு மிகச் சிறியது அவரும் சையத் ராஸ்டியும் தெள்ளுப் பூச்சியைப் பிடித்து, அதன் காலுக்கு எஃகில் 'ஷூ' தைத்துப் போட்டிருக்கிறார்கள்.

நம் நாட்டிலும் இது போல அரிசியில் பகத்கீதை எழுதுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சரியான ஆதரவும், ஊக்குவிப்பும் இல்லை. கா. இராமச்சந்திரன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# நமது முருங்கை மருத்துவம்

□ வீட்டுத் தோட்டத்தில் ஒரு முருங்கை மரம் இருக்கிறதெனில், எப்போதும் நம்முடன் நல்லதொரு மருத்துவர் இருப்பதாக அர்த்தம்.

■ முருங்கைக்காய் பசியை அதிகரிக்கும்; வயிற்றுப் புண்ணை ஆற்றும்; தலைவலியைப் போக்கும்; கடும் இரத்த பேதியைக் குணப்படுத்தும்; இரத்தத்தை, சிறுநீரைச் சுத்தப்படுத்தும்; கபத்தை ஒழிக்கும்.

□ வாரத்திற்கு 2 முறை முருங்கைக் காய் சமையுங்கள், உஷ்ண, பித்த, வாயு தொல்லையுடையவர்கள் மட்டும் முருங்கையை குறைப்பது நல்லது.

■ ஓர் அவுன்ஸ் முருங்கைக் காயின் சத்துக்கள்:- இரும்புச் சத்து-1.5 மி.கி.; கொழுப்பு-.1 கி.; புரதம்-.7 கி.; கார்போஹைட்ரேட், கால்சியம்-8 மி.கி.; பாஸ்பரஸ்-30 மி.கி.; அத்துடன் வைட்டமின் ஏ, சி சத்துக்கள்.

□ நீரழிவு நோயைத் தீர்க்கும் ஆற்றல் முருங்கைக் கீரைக்கு உண்டு. இலையுடன், எள் சேர்த்து தொடர்ந்து சமைத்து சாப்பிட்டால் எவ்வளவு கடும் நீரழிவு நோயும் அகலும்.

■ 'காய்ச்சல், 'உடல் அங்கங்கள் உணர்ச்சியற்றிருத்தல், நரம்புத் தளர்ச்சி இவற்றிற்கு முருங்கை மர வேரை நீர் விடாமல் அரைத்து நெல்லிக்காய் அளவு பசும்பாலில் கலந்து காலை மாலை அருந்துக.

□ இதயத்துக்கு வலுவூட்டும் சக்தி முருங்கைப் பூவுக்கு உண்டு. முருங்கைப் பூவை அவித்து சில நாட்கள் தொடர்ந்து உணவோடு சேர்க்க, இதயம் பலப்படும்.

■ பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்து "இழந்த சக்தி"யை மீட்க, டூர் அடிக்கும் மருத்துவர்களிடம் மருந்து வாங்கி ஏராளமாக பணம் செலவழிப்பதைவிட முருங்கையை நம்புங்கள். முருங்கை பிசினை 8 மணி நேரம் நீரில் ஊறவைத்து 2 அவுன்சு நீருடன் சிறிது கல்கண்டு சேர்த்து தினமும் சாப்பிட்டால் மேக நோய்கள் நீங்கும்; தாது விருத்தி ஏற்படும்.

— சித்தன்

# புற்றுநோய் வராமல் தடுப்பது எப்படி?

உயிர் கொல்லும் நோய்களின் தலைமைப்பீடத்தில் கொலுவீற்றிருக்கும் பயங்கர நோய் புற்று நோய். இது தொற்றுநோய் வகைகளில் சேர்க்கப் படவில்லை. எனினும் தாயின் கருவில் இருக்கும்போது தொற்றிய புற்றுநோய்க் கிருமிகள் பல ஆண்டுகளாக உடலில் உறங்கிக்கிடந்து பின் திடீரென வெளிப்பட்டுப் பயமுறுத்தும்.

புற்றுநோய் தோற்றுவிக்கும் பொருள் என்று முத்திரையிட்டு எதையும் சொல்ல முடியாவிட்டாலும் அதோடு மிக நெருங்கிய தொடர்புள்ள பொருள் புகையிலை ஒன்றே.

இத்தகைய கொடிய புற்றுநோய் வராமல் தடுக்க முடியும்:

1 புகைபிடித்தலை முற்றிலும் தவிர்க்க வேண்டும். புகையிலையின் தழை, பொடி, புகை ஆகிய எந்த வடிவமும் தீங்கிழைக்கும்.

2 குடிப்பழக்கத்தை அறவே விட்டொழிக்க வேண்டும். ஏனெனில் இதனால் இரப்பையிலும் குடலிலும் தோன்றும் புண்ணே புற்றுநோயாக மாற அதிக வாய்ப்புண்டு.

3. ஸ்டவ்வில் சமைக்கும் போது கெரசின் புகை உணவுப் பொருளில் படியாமல் கவனமாக இருக்க வேண்டும்.

4 வாயில் பற்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்பதை பல்மருத்துவரிடம் காட்டிச் சரிசெய்து கொள்ள வேண்டும். பல்லினால் வாயின் உட்சுவர்களில் உறுத்தல் தொடர்ந்து இருக்குமானால் அங்கு புற்றுநோய் வளர்ச்சி தொடங்குகிறது.

5 ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப் பட்டால் புற்றுநோயை குணப்படுத்த அதிக வாய்ப்புண்டு. எனவே உடலில் 10 அல்லது 15 நாட்களுக்குமேல் ஆறாத புண், ஓயாத இருமல், தீராத தலைவலி, வீரைவீக்கம் இவை இருந்தால் உடனே மருத்துவரை அணுகுக.

6 தைராய்டு சுரப்பிகளுக்கு உயிரூட்டும் பயிற்சியாகிய சர்வாங்காசனத்தை இளமையிலிருந்தே தவறாமல் செய்துவர வேண்டும். [காண்க சுட்டி எண்: 5 ]

(அடுத்து: சரும நோய்கள் வராமல் தடுப்பது எப்படி?)

— சுட்டிபாரதி

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# வெளிநாடுகளில் இந்தியர்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 39,570 | பிஜூசிலாந்து | 6,700 |
| பஃரின் | 27,100 | நைஜீரியா | 9,000 |
| போட்ஸ்வானா | 600 | ஓமன் | 25,000 |
| பர்மா | 3,00,000 | பிலிப்பைன்ஸ் | 2,516 |
| கனடா | 2,50,000 | குவாடர் | 25.100 |
| எதியோப்பியா | :3,100 | சௌதி அரேபியா | 90,000 |
| பிஜித்தீவு | ,2,95,425 | சிங்கப்பூர் | 1,56,000 |
| கானா | 1,244 | தென்னாப்பிரிக்கா | 7,50,000 |
| கிரினிடா | 9,500 | தென்ரோடீசியா | 10,000 |
| கயானா | 4,25,250 | ஸ்பெயின் | 4,000 |
| இந்தோனேசியா | 35,000 | ஸ்ரீலங்கா | 11,26.863 |
| ஈரான் | 20,500 | செயின்ட் வின்சென்ட் | 3709 |
| ஜமைக்கா | 35,000 | சூரினாம் | 1,42,345 |
| கென்யா | 81,100 | டான்சானியா | 62,100 |
| குவைத் | 60,220 | தாய்லாந்து | 20,000 |
| லாவோஸ் | 110 | டிரினிடாட், டுபாகோ | 6,06,400 |
| லெசோதோ | 600 | ஐக்கிய அரபு குடியரசு | 42,000 |
| மலகாசி | 19,000 | உகண்டா | 463 |
| மலேசியா | 10,20,000 | பிரிட்டன் | 6,00.000 |
| மாலவி | 7000 | ஐக்கிய அமெரிக்கா | 3,50,000 |
| மஸ்காட் | 40,000 | தெற்கு ஏமன் | 3,000 |
| மொரீசியஸ் | 6,00,000 | வடக்கு ஏமன் | 600 |
| நேப்பாளம் | 33,60 000 | ஜாம்பியா | 24 000 |
| நெதர்லாந்து | 1,500 | மொத்தம் | 1,05,41,589 |

உலகத்தில் இன்று இந்தியர்கள் குடியேறாத நாடுகள் இல்லை! முன்பு உடல் உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு, இலங்கைக்கும், மலேயாவிற்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் கப்பலேறினார்கள். அவர்கள் வேர்வை சிந்திய இடமெல்லாம் வளம் கொழிக்கிறது.

இன்று எண்ணெய் வளநாடுகளைத் தங்கச் சிறைகளாக எண்ணி எவ்வித அசுர உழைப்புக்கும் தயாராக நம்மவர்கள் படையெடுக்கிறார்கள். இவர்களின் விலை குறைந்த உழைப்பால், மத்திய கிழக்கு வளம் சேர்க்கிறது.

இந்த உடல் உழைப்பாளர்களைவிட அதிகமாக அறிவு உழைப்பாளர்களாக ஏராளமான விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப வல்லுனர்களும், மருத்துவர்களும் இலட்சக்கணக்கில் சமீபத்திய ஆண்டுகளில் மேலை நாடுகளில் குடியேறி வருகின்றனர் இந்த நாடு இவர்களைப் படிக்க வைத்தும், பயன்படுத்திக் கொள்ளாததை அயல் நாடுகள் லாபகரமாகப் பயன்படுத்துகின்றன.

அண்மையில் மேலை நாடுகளில் குடியேறிய இந்தியர்கள் செல்வத்திலும் செல்வாக்கிலும், மிக உயர்ந்து வருகிறார்கள். சிறப்பாக, அமெரிக்க ஐக்கியநாடுகளின் 1965 குடியேற்ற சட்டத்திற்குப்பின்னரே 92% இந்தியர்கள் வந்தார்கள். இப்போது யூதர்களுக்கு அடுத்த படியாக அமெரிக்க வல்லரசின் 2-வது சிறுபான்மை பணக்கார இனமாக இந்தியர்கள் உயர்ந்துள்ளனர்.

ஒரு சராசரி அமெரிக்கனைவிட, அங்குள்ள சராசரி இந்தியன் கல்வியிலும், வாழ்க்கை தரத்திலும் உயர்ந்து விட்டான். இந்தியனின் சராசரி ஆண்டு வருவாய் அங்கு ரூ. 2.5 லட்சம். அமெரிக்காவிலுல்ள சுமார் 3,50,000 இந்தியர்களின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 9000 கோடி. 16% இந்தியர்கள் ரூ. 4,50,000க்கு மேலும் 31% இந்தியர்கள் ரூ. 3,15,000 மேலும் ஆண்டொண்டிற்கு சம்பாதிக்கின்றனர்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் படிக்கும் 80% இந்திய மாணவர்கள் சராசரிக்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெறுகிறார்கள். 76.1% இந்தியர்கள் உயர்ந்த நிர்வாக பொறுப்பு வகிக்கின்றனர். எடுத்துக் காட்டுக்கு சில.

கலிபோர்னியாவின் சிலிக்கன் சிப்ஸ் சமவெளியை 1000 இந்திய கம்ப்யூட்டர். விஞ்ஞானிகள் தங்கள் கட்டுப்பாட்டில் இயக்கி வருவதுடன் அதன் வழி கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள பொருட்களை அங்கு உற்பத்தி செய்கின்றனர். சிகாகோவின் கிழக்கு மேற்கு பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருப்பவர் 32 வயது மதுஜெயின். இந்தியானா மாநில மக்களவை பிரதிநிதியாக வெற்றி வாய்ப்புடன் போட்டியிட இருப்பவர் டாக்டர் கோபால் ராஜு. அமெரிக்க பந்தயக்கார் நிறுவனத்தின் தலைமைப் பீடத்தில் நாராயண் சர்மா; நாட்டின் மிகச் சிறந்த ஒலி நுட்ப நிபுணராக அமர்போஸ்; ஐபிஎம் கம்ப்யூட்டரைத் தவிர இன்னொரு புதிய கம்ப்யூட்டர் தயாரிப்பு நிறுவனம் அமைத்துள்ள 36 வயது தம்பி தாமஸ்; சான் பிரான்சிஸ்கோவின் இந்தியா வெஸ்ட் செய்தித் தாளின் வெளியீட்டாளராக ரமேஷ் முரார்கா.

நியூயார்க்கில் மட்டும் 1 லட்சம் இந்தியர்கள் வசிக்கிறார்கள். ஆண்டொன்றிற்கு 20,000 இந்தியர்கள் அமெரிக்காவிற்குள் நுழைகிறார்கள். எனவே அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களில் இந்தியர்களின் பங்கு முக்கியத்துவம் வகிக்கிறது.

பிரிட்டனில் உள்ள 6 லட்சம் இந்தியர்கள், அந்நாட்டின். மிகப் பெரிய சிறுபான்மையினர். பிரிட்டிஷ் வங்கிகள் இந்தி

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

யர்களுக்குக் கடன் கொடுக்க மறுத்தாலும், அங்கு 40% பல சரக்கு கடைகள் இந்தியர்கள் கையிலிருக்கிறது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் மொத்த மக்கட் தொகை மட்டும் பின்லாந்து, எகிப்து, சிரியா, ஸ்விட்சர்லாந்து ஸ்வீடன் ஆகிய நாடுகளின் மக்கட் தொகையை விட அதிகம். இவர்கள் மொத்தமாக ரூ. 1,15,000 கோடி சொத்துக்கு சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இது இந்தியாவின் தேசிய சொத்தில் பாதியாகும்.

47 நாடுகளில் உள்ள சுமார் 1 கோடி இந்தியர்கள் 1981-ல் மட்டும் ரூ. 4600 கோடி தங்கள் தாயகத்திற்கு அனுப்பியுள்ளனர். இது நம் தேசிய உற்பத்தியில் 6%.

இந்தியாவில் கவனிக்கப்படாது, பராமரிக்கப்படாது, அசட்டை செய்யப்பட்டவர்கள் இந்தியாவிற்கு வெளிநாடுகளில் பெருமை தேடித் தருகிறார்கள். இவர்களையெல்லாம் சரியாக இனியும் பயன்படுத்தாமல் விடுவது மாபெரும் தேசிய இழப்பாகும். இங்கு புறக்கணிக்கப் பட்டவர்கள் வெளிநாட்டில் நோபல் பரிசு வாங்கும் நிலை வந்தபோதும் இந்திய அரசு தன் வறட்டுக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. வெளிநாட்டு இந்தியர்களின் உயர்ந்து வரும் செல்வாக்கும், உயர்வும், திறமையும் இப்போதாவது நம் அரசின் குருட்டுக் கண்களைத் திறக்குமா?.

இப்போது இந்தியர்களின் அயல்நாட்டு சொத்தினை முறைப்படுத்தி பயன்படுத்துவதன் மூலம் ஐ எம் எப் கடன் சுமையைக் கொஞ்சம் இறக்கி வைக்க வழியுண்டு என்று நிபுணர்கள் வழி சொல்கிறார்கள். இதையாவது நமது அரசு உருப்படியாக செயல்படுத்துமா?

—எழில்

ஆதாரம்: ஜென்டில் மென்.


புது அச்சகம் தொடங்குவோரும், புது அச்சு எழுத்துக்கள் வேண்டுவோரும் சிறந்ததை மலிவாகப் பெற மறவாமல் தொடர்பு கொள்க:-

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

☐ போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
☐ எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்

**அலுவலகம்:** 73 ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112
**தொழிற்சாலை:** 38, குட்டிசெட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7
**தொலைபேசி:** 37999, 30857


# வாசகர் குமுறல்

**யுபிஎஸ்சி தேர்வு:** மத்திய அரசு தேர்வு நிறுவனமான யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் [UPSC] நிறுவனம், 1982-ம் வருடத்திற்கான "Assistant Grade" தேர்வுகளை அக்டோபர் 5, 6 தேதிகளில் நடத்தியது. வழக்கமாக இம்மாதிரி தேர்வுகள் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் நடத்தப்படுவதுதான் வழக்கம். இம்முறை வழக்கத்திற்கு மாறாக, செவ்வாய், புதன் ஆகிய வேலை நாட்களில் நடத்தப்பட்டது மட்டுமின்றி, சென்னையின் தேர்வு மையங்களில் ஒன்றான கார்பரேசன் ஹையர் செகண்டரி பள்ளி மிகவும் வசதியற்றதாகவும் இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட கட்டிடத்தில் பரிட்சை எழுதியவர்களுக்கு மிக மட்டமான துர்நாற்றம் பிடித்த காற்றும், வியர்வையுமே மிச்சம். சின்ன வகுப்பு சிறுவர்களுக்குப் போடப்பட்ட இருக்கைகளிலே உட்கார்ந்து உடலை நெளித்துக்கொண்டு எழுதியது உடற்பயிற்சி செய்வது போல் இருந்தது. பரிட்சை கட்டணமாக ரூபாய் 28/- வசூலிக்கும் இந்த மத்திய அரசு UPSC தேர்வு நிறுவனம், தன் தேர்வுகளைச் சரியானபடி நடத்துவதில் இனியாவது கவனம் செலுத்துமா?

அக்கினிகுஞ்சு, திருச்சி-20.

**வரி வசூல் உண்டு - வசதி இல்லே!** உடுமலை கருணாநிதி காலனியில் 200 குடும்பங்கள் வசிக்கிறார்கள் கழிவு நீர் வசதிகள் இல்லாததால் ஒவ்வொரு வீட்டின் முன்பும் அசுத்தம், கொசுத்தொல்லை. பெயருக்கு ஒரு குழாய் அதுவும் 3 அடி பிளாஸ்டிக் பைப் சொருகினால் மட்டும் கொஞ்சம் தண்ணீர் மேலே வரும். புறம்போக்கு நிலமான இதற்கு 13 வருடங்களாகியும், பல கட்சியினர் முயன்றும் பட்டா கிடைக்கவில்லை. இதற்குபின் தோன்றிய சில காலனிகளுக்கு பல வசதிகள் வந்து விட்டன. அனைத்து வீடுகளுக்கும் நகராட்சி வரி விதித்து கூசாமல் வசூல் செய்கிறது. ஆனால் எந்த சிறு வசதியும் 13 ஆண்டாக செய்யவில்லை! அதிகாரிகள் காதில் எங்கள் வேதனைச் சங்கொலி கேட்குமா?

—குடிசை வாழ் மக்கள் சார்பாக எம். தங்கராஜு, உடுமலைப்பேட்டை

→

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

**லாட்டரி மோசடி:** இந்தியாவிலேயே அதிக லாட்டரி டிக்கெட்டுகள் விற்பனையாகும் நகரம் மதுரை. இங்கு ஒரு புது மோசடி நடக்கிறது. வெளிமாநில குலுக்கல் முடிவுகள் நாளிதழ்களில் வெளியாக ஒரு நாள் தாமதமாகிறது. சில கடைக்காரர்கள் இடைத்தரகர்களின் மூலமாக அன்றே முடிவுகளை டெலிபோன் வாயிலாக காலை 10, 11 மணிக்குள் தெரிந்து கொள்கின்றனர். பரிசு விழுந்த சீட்டுகளாக இருந்தால், தனியாக எடுத்து வைத்துவிட்டு விழாத எண்ணுள்ள சீட்டுகளை அன்றைய தினம் இரவுவரை விற்பனை செய்கின்றனர். பொது மக்களே உஷார்.

—திசை. முத்து, மதுரை-9.

**பல்லவனும் பாண்டியனும்:** சென்னை நகரில் பல்லவன் பேருந்துகளில் காலையில் உச்சநேரக் கூட்டம் இருக்கும்போது 'ஸ்டேஜ்'ற்கு முன்பாக டிக்கட்டுகள் கொடுப்பதற்காக பேருந்தை நீண்ட நேரம் நிறுத்திவிடுகிறார்கள். அவசரமாக வேலைக்குச் செல்வோரும், மாணவர்களும் இதனால் தினமும் தொல்லைப் படுகின்றனர். மதுரை பாண்டியன் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் இரண்டு கண்டக்டர்கள் போடுகின்றனர். எப்போதுமே "ஸ்டேஜ்' க்ளோஸ்" என்பது கிடையாது. ஏறிய இடத்தையும் இறங்கப்போகும் இடத்தையும் சொல்லி எவ்வளவு 'ஸ்டாப்'புகள் தள்ளி வேண்டுமானாலும் டிக்கட்டுகள் வாங்கிக்கொள்ளலாம். இதே முறையைப் பல்லவன் பேருந்துகளிலும் பின்பற்றினால் என்ன?

—மதுரை மணியன், சென்னை-44


## பாலன் சகோதரர்கள்

வீட்டிற்கோர் நூலகம் அமைக்க விரும்புகிறீர்களா? இன்றே "சரசுவதி குடும்ப புத்தக வங்கி"-யில் உறுப்பினராகி பயனடையுங்கள். **10%** கழிவு உண்டு.

முழு விவரங்களுக்கு :— [50 காசு தபால் தலையுடன்]

380, செம்பியம் சாலை, கதிர்வேடு கிராமம்,

புழல் அஞ்சல், சென்னை-600066.


உலக நடப்பு

# ஸ்பெயினில் புதிய ஆட்சி

முதன் முறையாக ஸ்பெயி'ன'ல சோஷலிச ஆட்சி மலர்ந்துள்ளது மிகவும் வரவேற்க கூடியதாகும்;

1936 இல் ஏற்பட்ட உள்நாட்டுப் போருக்குப் பிறகு, ஸ்பெயின் நாட்டு தளபதி பிராங்கோ சர்வாதிகாரியானார். 1975 வரை அங்கு சர்வாதிகார ஆட்சியே நடந்து வந்தது. 7 ஆண்டுகளுக்கு முன் சர்வாதிகாரி இறந்த போது வலது சாரி ஆட்சி ஏற்பட்டது. 1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய ஜனநாயக கட்சி என்ற வலது சாரி கட்சி ஆட்சிக்கு வந்தது.

சமீபத்தில் இந்தக் கட்சியிலிருந்து பலர் பிரிந்து கட்சி மாறி விட்டனர், எனவே பிரதம மந்திரி கால்வோ சோட்டேலோ வலுவிழந்தார். முன்னதாகவே தேர்தல் நடத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஆட்சியைப் பிடிக்க சர்வாதிகாரி பிராங்கோவின் அமைச்சராக இருந்த மானுயல் பிராகோ பெரும் முயற்சி செய்தார். மக்கள் அணி என்ற வலது சாரி கட்சியின் தலைவர் இவர். பிராங்கோவின் பழைய சர்வாதிகார ஆட்சியைப் புதுப்பிக்க இவர் எடுத்த முயற்சி படு தோல்வி அடைந்துள்ளது.

இடது சாரி கட்சியாக சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சி தேர்தலில் மக்களின் பெரும் வாக்குகளைப் பெற்றுள்ளது. 350 பேர் கொண்ட பாராளு மன்றத்தில் இக்கட்சி 194 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

கட்சி தலைவராக உள்ள இளம் தலைவர் (40 வயது) பிலிப் கன்சாலஸ், புதிய பிரதம மந்திரியாக பதவி ஏற்றுள்ளார்.

43 ஆண்டுகாலம் பிற்போக்கு சக்திகளை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் பலனே இந்த புதிய இடது சாரி மலர்ச்சி.

ஆட்சியைப் பிடித்த சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சி தலைவர் பிலிப் கன்சாலஸ் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒன்றைத் தெளிவாக அறிவித்தார்.

"அமெரிக்கா ராணுவ கூட்டான "நாட்டோ" வில் இருந்து ஸ்பெயின் விலகும்."

பிரான்சிலும் சில மாதங்களுக்கு முன்பு சோஷலிசக் கட்சி இதேபோல ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. விரைவில் மேற்கு ஐரோப்பா முழுவதும் சர்வாதிகார, ஏகாதிபத்திய நச்சுக் காற்றை விலக்கி சோஷலிச தென்றல் பரவும்.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

நாம் அறிய வேண்டியவர்கள் :

# வித்தியாசமான மணிப்பூரின் கன்ஹய்லாலின் நாடகக்குழு

இன்றைய மாமூல் மேடை நாடகங்களைப் பின்னுக்குத் தள்ளும் புதிய புரட்சிகரமான நாடக வடிவத்தைப் படைத்திருக்கிறார் கன்ஹய்லால்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்பிரதேசமான மணிப்பூரிலிருந்து இந்தப் புதிய கலைவடிவத்தை இந்த வியப்புக்குரிய மனிதர் உற்பத்தி செய்திருப்பது மெய்சிலிர்க்க வைக்கிறது.

வானொலி டி. வி, மசாலா மேடை நாடகங்களைப் பார்த்துப் பார்த்து துருப்பிடித்துப் போனவர்களுக்கு கன்ஹய்லாலின் இந்த நாடகங்களைப் பார்ப்பது நாம் எவ்வளவு தூரம் தள்ளியிருக்கிறோம் என்பது புரிய வரும். நாடகத் தமிழ் என்று எல்லாம் பேச இனி நம்மவர்களுக்கு நா கூச வேண்டும், என்ற உணர்வே இதைப் பார்த்த பிறகு எழுகிறது.



இந்த மணிப்பூர் கன்ஹய்லாலின் நாடகம் நம்மைப் புதிய பரிமாணத்திற்கு எடுத்துச்செல்கிறது. நுட்பமான உண்மைகளை நாடகக்கலை வடிவில் சொல்ல மொழி அவசியமே இல்லை என்பதை இந்நாடகங்கள் மெய்ப்பிக்கின்றன.

எடுத்துக்காட்டாக 'பெபட்' என்ற நாடகத்தில் பறவைகளும் பூனையுமே பாத்திரங்கள். விடுதலையைப்பற்றி எளிமையாகச் சொல்லும் கவிதையைப் போன்ற இந்நாடகத்தில் பறவைகளின் இரு சொற்றொடர்களும், ஒரு தெளிவான சொற்றொடரும் மட்டுமே இடம் பெறுகின்றன.

நடிப்பு என்பது வசனங்களில் இல்லாமல் பாத்திரங்களின் பாவனைகளிலும், ஒலிக்குறிப்பிலுமே அழகாக வெளிப்படுத்தப் படுகிறது. முகச்சதைகளைப் மிக ஆற்றலுடன் பயன்படுத்துவதில் நாடக உறுப்பினர்கள் கைதேர்ந்திருக்கிறார்கள்.

பின்னணிக்காட்சி (Scene Set) இல்லை. நடிகர்களுக்கு செயற்கையான ஒப்பனைகள் இல்லை. வேஷங்கள் கிடையாது மேல் சட்டை கூட இல்லை. முகமும், நடிப்புமே நாடகத்தை உயிர்ப்பிக்கும்போது இவையெல்லாம் எவ்வளவு அநாவசியம் என்பது புரிகிறது.

மற்ற பரிசோதனை நாடகங்களைப் போலன்றி மிகப் பாமரர்களும் புரிந்து கொண்டு, உணர்ந்து கொள்ளுமளவுக்கு எளிமைப்படுத்தப்பட்டிருப்பது இதன் சிறப்புச்சாதனை.



திரு. கன்ஹய்லால், 1969 இல் கலா ஷேத்ரா என்ற நாடகக் குழுவைத் தொடங்கினார். மணிப்பூரின் தலையாய பரிசோதனை நாடகக் குழுவாக இது வளர்ந்தது. மணிப்பூர் மண்ணின் கலாச் சாரத்தையும், நாட்டுப்புற கதைக்கருவையும் உட்கொண்டே இவரது புதிய வடிவங்கள் அரங்கேறின.

இவரது நாடகங்கள் 1974 இல் கல்கத்தாவிலும், 1975 இல் டில்லியிலும் மேடை ஏற்றப்பட்டபோதுஇந்தப் புதிய கலைவடிவின் மேதைமையை பத்திரிகைகள் திகைப்புடன் வியந்து எழுதின.

1978-79 இல் கலாஷேத்ரா, கிராமப்புறங்களில், விவசாயிகளை வைத்து அவர்களைப் பாதிக்கின்ற போக்குகளை மேடை ஏற்ற முயன்றது. இதன் வழி பிறந்தது 'சன்ஜன் நஹா' என்ற நாடகம்.

சமீபத்தில் பழங்குடி மக்கள்ளை ஒன்றுபடுத்தி, பழங்குடி நாடகக்குழு அமைக்க முயன்றது. இந்தப் புதிய பரிசோதனையின் விளைவாக "தங்கோ லியான்டோ" என்ற பழங்குடியினர் பங்கேற்கும் நாடகம் அரங்கேறியது.

கடந்த 12 ஆண்டுகளில் கன்ஹய்லால் 20 நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார். இவை எல்லாமே சமுதாய பார்வையுடனும், நசுக்கப்பட்டோரை உயர்த்த செய்யப்பட்ட உயர்ந்த கலைவடிவ முயற்சியாயுமே உள்ளன.

கன்ஹய்லாலின் மனைவி சாவித்திரியும் சிறந்த நடிகை தமிழ் பரிசோதனை நாடகக் குழுவினரான 'கூத்துப்பட்டறை'யின் ஆதரவில் தமிழகத்தில் முதன்முறையாக சென்னை மியூசியம் தியேட்டரில் 15—11—82 அன்று இவரது இரு நாடகங்கள் நடைபெறுகின்றன.

—அஞ்ஞானி


"இணைவோம்" இது ஒரு இலக்கிய அமைப்பு
பசுமையை நோக்கி இது ஒரு பயணம்! மக்களே விழிப்பு வேண்டுமென்று இணையுங்கள்!
தொடர்புக்கு : ஓவியர் ஜேக். பம்மல், சென்னை — 600 075.

# குழந்தைக் கனவுகள்!



“ஆத்தா டாக்டரம்மா ஊட்டுக்கு போவியா?”-வள்ளி.

“ஆத்தா இனிசுபெக்டர் ஊட்டுக்கு போவியா?”-கந்தசாமி.

“ஆத்தா வக்கீலு ஊட்டுக்கு போவியா?”-முத்து.

பொன்னம்மாள் கேள்விகளை கேட்டு பதிலுக்காய் முன்னால் நிற்கும் தனது பிள்ளைகளைக் கொஞ்சம் ஏக்கத்தோடு, கொஞ்சம் துக்கத்தோடு, கொஞ்சம் அவலத்தோடு பார்த்தாள். எதற்காக அவர்கள் கேட்கிறார்கள் என்பது அவளுக்கு நன்றாய் புரிந்ததால் அவளுக்குள் அந்த கொஞ்சல்கள் நிறைய பெருகியிருந்தன!

போவேன்! என்கின்ற மாதிரி தலையசைத்தாள். தலையசைப்பை நிஜமாக்கி போன காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பியபோது வள்ளியும், கந்தசாமியும் தகப்பன் தங்கப்பன் காயப் போடக் கொடுத்த ஈரத்துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளாவிப்பானைக்கு கீழ் முத்து காற்றை ஊதி ஊதிவிட்டுக் கொண்டு புகையும் நெருப்பை, சிவந்த தீ நாக்காய் ஆக்க முனைந்து கொண்டிருந்தான்.

மூவரும் பொன்னாத்தாள் பெரிய துணிமூட்டை ஒன்றோடு வரவும் ஆவலுடன் அவளைப் பார்த்தனர்.

அவள் ஆசுவாசிப்போடு துணிமூட்டையைக் கீழே இறக்கினாள். மூவரும் வேகமாய் ஓடிவந்து அந்த அழுக்குத் துணி மூட்டையை அவசர அவசரமாய் பிரித்து...

வள்ளி ஒருடாக்டரம்மாவின் வெண்ணிற உடுப்பை ஆவலுடன் எடுத்துக் கொண்டாள்.

கந்தசாமி ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் கம்பீரகாக்கி உடுப்பை எடுத்துக்கொண்டான்.

முத்து வக்கீல் ஒருவரின் கருப்பு ஆடையை எடுத்துக் கொண்டான்.

அடுத்த சில நிமிடங்களில் மூவரும் அந்த ஆடைக்குள் தங்களை உள்ளடக்கிக் கொண்டு அவரவர்க்குண்டான தோரணைகளோடு வந்து நின்றபோது அதைப் பார்த்த தங்கப்பனுக்கு சிவு சிவுத்தது. →

“அடேய் என்னடா இது அழுக்கு உடுப்புகளை மாட்டிக் கிட்டு...தொவைக்க குடுத்த உடுப்புகளை எடுத்து மாட்டிக் கிழிச்சு குட்டிச்சுவராக்கீடாதீங்க... அவுருங்கடா...”

—கத்த வாயெடுத்தவனை பொன்னாத்தா விழியில் கெஞ்சலுடன் பரிதாபமாய் பார்த்தாள்: அந்த பார்வையினூடே அவர்களின் மனக்கனவுகள் அவனுக்குப் புரிய வந்தது.

அந்த கனவுகளை நனவாக்கிட முடியாத தனது அவலத்தோடு அவன் அவர்களைப் பார்த்தான். அவன் விழிகளை நீர் மூடியிருந்தது.

—இந்திர சௌந்தரராஜன்

# இந்நாட்டில் இப்படியும் நல்லவர்கள் உண்டு!



ராய்பூர், (ம.பி.) அருகே உள்ள அதிசய கிராமம் கித்வா. இந்த கிராமத்தில் கடந்த 100 ஆண்டுகளில் ஒருவர்கூட மது அருந்தியதில்லை; மாமிசத்தைத் தொட்டதில்லை. கற்பழிப்பு நிகழ்ச்சி ஒன்றுகூட நடந்ததில்லை. சமீபத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த 600 மக்களும் ஓரிடத்தில் கூடி இதே மாதிரி தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக இருக்க வேண்டுமென உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் எதுவும் வரம்பு மீறி செய்வதை தட்டிக் கேட்க முடியா நிலை! அமைச்சர்கள் தங்கள் பிள்ளைகளை உயர்த்தவோ, அவர்கள் செய்த அநியாயத்தை மறைக்கவோ, எதுவும் செய்கிறார்கள்! இந்நிலையில் இப்படி ஓர் அதிசய நிகழ்ச்சி:— முன்னா லால் சுக்லா என்பவர், ஜவகர்லால் நேரு இடை நிலை கல்லூரி முதல்வர். இது கிர்வான் (உ.பி.) என்ற இடத்தில் உள்ளது, கல்லூரியில் ஒழுங்கை நிலைநாட்ட தவறு செய்த தன் மகனையே கல்லூரியை விட்டு நீக்கியிருக்கிறார். இதே காரணத்திற்காக கல்லூரி தலைவரின் மகனையும் வெளியேற்றியிருக்கிறார். பிறகு வருந்தி வேண்டிக் கேட்டுக் கொண்டதன் பேரில், தலைவர் மகனை சேர்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் தன் மகனை எக்காரணத்தை முன்னிட்டும் திரும்பி சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010


# விஞ்ஞானிகள்: ஜாக்கிரதை!

விஞ்ஞானி என்றால் ஏதோ சாரிடான் தலைவலி விளம்பரத்தில் வருவாரே அவரைப் போல் பைப்பை வாயில் வைத்து கொண்டு கலைந்த தலையுடன் பாரபட்சமில்லாமல் உண்மையைத் தேடி அலைபவர் என்பது பொது ஜன எண்ணம்.

ஆனால் உண்மை நிலை வேறு. நியூ சயிண்டிஸ்ட் என்ற பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞான பத்திரிகை 184 'தகிடு தத்த' விஞ்ஞான ஆய்வுகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் டாக்டர் ஜகதீஸ் சந்திர போஸ், டாக்டர் சாமிநாதன். விவசாய ஆய்வாளர், திட்டக்கமிஷன் உறுப்பினர் முதலியோரின் ஆய்வுகளும் கறைபடிந்தவை தான் என்று இவ்விதழ் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறது.

விஞ்ஞானத்தின் நவீன கிளையான புலன் கடந்த உளவியலும் இதற்கு விதிவிலக்கல்ல. விஞ்ஞானப் பூர்வமாக பார்ப்பதில் மிகுந்த எச்சரிக்கை தேவைப்படும் துறை இது. கண்கட்டி வித்தைகளும், மாயாஜாலங்களும், மூட நம்பிக்கைகளும் ஒரு சிலரால் புலன் கடந்த உளவியல் என்று விஞ்ஞானப்படுத்தப் படுகின்றன. தங்கள் சொந்த பிற்போக்குக் கருத்துகளுக்கு இங்க விஞ்ஞானத்தைத் துணைக்கழைக்க முயல்வது மாபெறும் ஏமாற்று வேலையாகும்.



பேராசிரியர் டாக்டர் பானர்ஜி, ராஜஸ்தான் புலன் கடந்த உளவியல் துறையின் தலைவர். தனது ஆய்வுகளின் புள்ளி விவரங்களைத் தனது முடிவுகளுக்கேற்ப இவர் மாற்றியது மற்றொரு பிரபல விஞ்ஞானியால் கையும் களவுமாக கண்டு பிடிக்கப்பட்டது. இதற்குப்பிறகு இவரது ஆய்வுகள் மற்ற விஞ்ஞானிகளால் நிராகரிக்கப்பட்டன.

இதற்கெல்லாம் காரணம்? மனிதர்கள் முதலில் மனிதர்கள்; பிறகு தான் விஞ்ஞானிகள். தங்கள் சொந்த அபிலாஷைகள், திடீர் காப்பிபோல் வரக்கூடிய திடீர்ப் புகழ் முதலியவை சிலரை இத்தகைய தகிடுதத்த, குறுக்கு வழி ஆய்வுகளில் ஈடுபடுத்தி வருகின்றன.

ஊழலும் கள்ளத்தனமும் மதத்திலும், அரசியலிலும் மட்டுமல்ல, விஞ்ஞானத்திலும் உள்ளன.

—ரமேஷ்

# இரு பெரும் விழாக்கள்

உலகத்தின் முதல் சோஷலிசப் புரட்சி 1917 நவம்பர் 7 ல் நடைபெற்றது. மனிதகுல வரலாற்றில் புதுயுகத்தைப் படைத்த இந்த அக்டோபர் புரட்சியின் 65 ஆம் ஆண்டு விழாவை இவ்வாண்டு சோவியத் நாடும், கொண்டாடுகிறது.

புரட்சியின் விளைவாக ரஷ்ய மக்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கி எறிந்து, தாமே ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தனர். அந்நாளில் உலகின் முதலாவது சோஷலிச அரசு பிறந்தது.

ரஷ்யாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் விளைவாக, உலகின் பல பகுதிகளில் தேசவிடுதலை இயக்கத்தில் பேரெழுச்சி ஏற்பட்டது.

இப்புரட்சிக்குப் பின்னர், முன்னாள் ரஷ்ய சாம்ராஜ்யப் பிரதேசத்தில் பல சோஷலிசக் குடியரசுகள் நிறுவப்பெற்றன.

எதிர்ப்புரட்சி மற்றும் அன்னியத் தலையீட்டிலிருந்து தாயகத்தைப் பாதுகாத்தல் நாடு முழுவதும் ஒரே பொருளாதார அமைப்பை நிறுவுதல், போர்களால் சீர்குலைந்த பொருளாதாரத்தை சீரமைத்தல், பின் தங்கிய பகுதிகளை உயர்த்துதல் போன்ற நோக்கங்களை முன்வைத்து நூற்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை ஒருங்கிணைத்து சோவியத் சோஷலிச யூனியனை அமைக்க திட்டம் உருவானது. 1922 டிசம்பர் 30 ல் முதலாவது சோவியத் அகில-யூனியன் காங்கிரஸ் இதற்கு அங்கீகாரம் அளித்தது.

பல தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் இவ்வுலகில் முதல் முதலில் ஒருங்கிணைந்து நிறுவியது சோவியத் யூனியன். இது உருவாகி இந்த டிசம்பரோடு 60 ஆண்டுகள் ஆகின்றன. 60 வது ஆண்டு விழாவை இவ்வாண்டு சோவியத் நாடு பெருமையுடன் கொண்டாடுகிறது.

வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளைக் காட்டும் இந்த இரு விழாக்களையும் சோஷலிச சிந்தனையாளர்கள் மகிழ்வுடன் நினைத்துப்பார்க்கலாம்; நிறைய பாடங்கள் கற்கலாம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# மார்பு எழுத்தாளருக்கு ஓர் மடல்

ஜோதிர்லதா கிரிஜா

அடுத்தவர் கவனத்தை அதிகமாய்க் கவர்ந்திழுக்க
நடுத்தெருவி விருந்தபடி நாணங்கெட்டு நடப்பவர்போல்
அடுக்கடுக்காய்ப் பாலுணர்வுக் கதை-படங்கள் வரையாதீர்!
கெடுக்காதீர் இளவயது உடம்புகளை-அடுக்காது.
தாவிடுவீர் பிறர்செய்த தவறடுக்கத் தந்திரமாய்
கோவில்களில் அம்மணமாய்ச் சிலைகள்பல இலையோ
வென
ஆவிபறக்கக் கேள்விகேட்பீர், யாமறிவோம், யாமறி-
வோம்
பாவிகளே அச்சிற்பிகளும், பாலுணர்வைத் தூண்டுவதால்.
ஆயினும் ஒன்றைமட்டும் வசதியாய் மறந்திடாதீர்
ஆயிரம் ஆயிரமாய் இளைஞரின்று படிக்கின்றார்-ஆனால்.
கோயிலுக்குச் சென்றிடுவோர் தம்தொகையோ மிகக்கொஞ்சம்
ஆயமுடியாத் தீமைகளை அடுக்கடுக்காய்ச் சேர்க்காதீர்.
கம்பன் எழுதாக் காமரசமா எழுதிவிட்டோம் நாங்க
ளென்று
வம்பர்கள் கேட்கிறார்கள்-வாதுக்கு இழுக்கிறார்கள்-
உண்மைதானானாலும்
உம்பர்கள் கேட்பரோ இப்படி ஓர் அசட்டுவினா?
கம்பனை மக்களின்று லட்சத்திலா படிக்கிறார்கள்?
சுவ்ரெலாம் பாலுறவுச் கிறுக்கல்கள் சிலர் செய்வர்
இவரெலாம் மனநோய் பிடித்தவராம் சிலர் சொல்வர்
கவரலாம் இவர்வழியில் சென்றிட்டால் வாசகரை-என
'விவரமாய்' செக்ஸ் எழுதும் எழுத்தாளர்க் கென்னநோயோ?
'எழுதினவன் நானென்று அறிந்திட்டால் இகழுவரே;
புழுதியை எறிந்தெனைத் தூற்றுவரே'-எனவெட்கி,
பழுதடைந்த மனம்எனினும் சுவர்-எழுத்தாளரெலாம்
எழுதியறி விப்பதில்லைத் தம்பெயரை எழுத்தின்கீழ்.
பெண்மையின் நிர்வாணத்தை வெட்கமற்றுப் பிட்டுவைத்து
'உண்மையா யெழுதுகிறோம்; உமக்கென்ன மறுப்பிதிலே?'
என
வன்மையாச் சாடுகின்ற வாரஏட்டு எழுத்தாளரோ
தன்மைகெட்டுத் தம் படம்-முகவரியைத் தம்பட்ட மடிக்கின்றார்!
→

## பெற்று வந்தவை

**மாதுளை:** (மாத இதழ்) S சண்முகம், 64-A, அய்யனார் தியேட்டர் அருகில், மோகனூர்-637 015 சேலம் மாவட்டம் தனியிதழ்: 90 காசு

**அன்னம் விடு தூது:** (மாத இதழ்?) அன்னம் வெளியீடு, 2, சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை-623 560 விலை: இல்லை; தொடர்ந்து இவ்விதழ் பெற ரூ 5/ தபால் செலவு மட்டுமே.

**உதயம்:-** மாத இதழ் (தனிச்சுற்றிதழ்) ஆசிரியர்: நா. தென்னிலவன், 4, புது டபீர் தெரு, கும்பகோணம்-612 001.

**தேன்கூடு:-** (கவிதைகள்) ஆசிரியர்: வி முரளி, 145, பிடாரியார் கோயில் தெரு, சென்னை-600 001. விலை : ரூ. 1-00

**ஆகாசம் நீலநிறம்:-** (கவிதைகள்) ஆசிரியர் : விக்ரமாதித்யன்; வெளியீடு: அன்னம் பிரைவேட் லிமிடெட், சிவகங்கை-623 560. விலை: ரூ. 3-00.

---

முதிராத மனங்கொண்டார் மொட்டவிழ்ந்த பருவத்தார்
மனம்
சிதறாது நிர்வாணம் தனைரசிக்கும் திறனற்றார்-எனவே
தான்
'பதறாதீர்; கலைக்கண்ணால் பார்த்திடுவீர்' எனும்
பேச்சை-உளம்
அதிராது நியாயமென ஏற்பதற் கியலவில்லை.
'மார்பினை' விவரித்துத் தம்கதைகளில் எழுதிவிட்டால்,
மரபினைத் தகர்த்ததாய் இவர்களுக்குள் ஒரு மதர்ப்பு-இவர்தம்
சார்பிலே கேட்கின்றேன், மனநோய் மருத்துவரே,-சதா
மார்புஜெபம் செய்பவர்க்கு வந்தநோய் என்ன நோயோ?
பாழ்படிந்த கற்பனையைத் தூண்டுகின்ற எழுத்துக்கள்
சீழ்ப்பிடித்தப்புண்ணினைப்போல் சீரழிக்கும் இளைஞருடல்
நோய்பிடித்த சந்ததிகள் உருவாக்கும்-இது சரியோ?
காழ்ப்பின்றிச் சிந்திப்பீர் காட்டமென்மேல் கொள்ளாமல்.

● ● ●

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# சாக்கடை ஜெயநாரம் நாறுகிறது

சென்னை க்ரீம்ஸ் சாலைச் சாக்கடையில் மூழ்கி வேலை செய்த துப்புரவாளர்கள் (காண்க: சுட்டி எண் 3) மூன்று பேர் சாக்கடை அசுத்த வாயுவினால் மூச்சுத் திணறி இறந்து போனார்கள் மறு நாள் சென்னை பெரு நகர் குழுமம் (metro water) தலா ரூ 10,000 நஷ்ட ஈடு கொடுத்துத் (காண்க இந்து: 29-5-82) தன் கடமையை முடித்துக் கொண்டது.

பல லட்சரூபாய் செலவில் இறக்குமதி செய்திருக்கும் சாக்கடைத் தூய்மை செய்யும் "ஜெட்டிங் மிஷின்கள்" போதுமான அளவில் இல்லை என்ற காரணங் காட்டி நாள்தோறும் 250 சாக்கடை மூழ்கிகள் மலக்-குழிகளில் இறங்கித் தம் உயிருக்கு ஆபத்து என்றா-லும் செய்தாக வேண்டும் என்று அந்த நிர்வாகம் ஆணை பிறப்பித்துப் பத்திரி-கைகளில் அறிக்கை விட்டு உள்ளது.

ஆனால் அதே சமயத்தில் அந்த நிர்வாகம் சாக்கடைக் கழிவு நீரிலிருந்து சமையல் வாயு உற்பத்தி செய்ய 65 லட்ச ரூபாய் செலவில் திட்டம் தீட்டி மும்முரமாக வேலையில் ஈடுபட்டுள்ளது. சென்னை கருணாநிதி நகரை அடுத்துள்ள 2000 மேட்டுக் குடியினர் அதனால் 'காஸ்' பெறுவார்களாம். கோயம் பேட்டியிலும், நேச பாக்கத்திலும் அந்தச் சாக்-கடை காஸ் உற்பத்தி சாலைகள் அமையப்போகிறதாம். இந்த மகிழ்ச்சிச் செய்தியை சென்னை மெட்ரோ அதிகாரிகள் பத்திரிகையில் [இந்து 2-7-82] செய்தியாக வைளியிட்டு புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள்,

சாக்கடையில் மூழ்கும் துப்புரவாளர்களுக்கு கொஞ்சம் பணம் செல-வழித்து அவர்கள் தொழிலை விஞ்ஞான மயமாக்கி அவர்களுக்கு அந்த நரகத்திலிருந்து விடுதலை அளிக்க துப்பில்லாத அதிகார வர்க்கங்கள் சாக்கடையிலிருந்து காஸ் எடுப்பதற்குப் பல லட்சங்களை விரயமாக்குவது எப்படி நியாயமாகும்?

—சுட்டி பாரதி

# அம்புலிமாமா



இளைஞர்களைத் திசை திருப்பி மந்தப்படுத்தும் குமுதம் வகையறாக்கள் போல சிறுவர்களுக்கு உள்ளது அம்புலிமாமா

அம்புலிமாமா குழந்தைகளின் கதை கேட்கும் ஆவலை மட்டுமே பயன்படுத்தி அவர்களுக்கு உதவாக்கரை கட்டுக் கதைகலை, பேய்கதைகலை, ஜாதகக்கதைகளை, புராணப் பொய்களை சொல்லி, எதிர்கால எதார்த்தத்திற்கு அவர்களை பயன்படாதவர்களாக ஆக்குகிறது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு இருந்த குழந்தைகள் மாதிரி இன்று இல்லை. அவர்களின் அறியும் சக்தியும். அனுபவமும் சுற்றி நிகழும் விஞ்ஞான வளர்ச்சியால் விரிவாக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்க, இன்னும் நாயக்கர் காலத்தில் இருந்து கொண்டு ஒரே மாதிரி உப்புக்குச்சப்பாணி கதைகளைப் பொறுக்கி அம்புலி மாமா தந்து கொண்டிருக்கிறது. ஒரு மாறுதலாக, மருந்துக்குக் கூட புதுமை செய்யாத குழந்தைகள் மசாலா பத்திரிகை இது தான்.

கால் நூற்றாண்டிற்குப் பத்திரிகையை முன்கூட்டி தயார் செய்து கொண்டு தேதியையும் விலையையும் மட்டும் மாற்றிக் கொள்கிறார்களா என்று கூட சந்தேகமாக இருக்கிறது. கால் நூற்றாண்டிற்குப்பின் அதையே திரும்ப முதலிலிருந்து தந்தா-லும் பெரிய வித்தியாசம் இருக்காது. ஒரே கதையை வேறு பெயருடன் போடவேண்டியது தான்.

சுற்றியுள்ள உலகத்தில் என்ன நடந்தாலும் அம்புலிமாமா கவலைப்படாது. எப்போதும் வண்ணத்திட்டுக்கள் நிறைந்த கடவுளர் அட்டைப்படம்; நீலநிறபார்டருடன் குறளிலிருந்து அறிவுரை முதல் போட்டோ வாங்கிய போட்டி வரைக்கும், கிட்டத்தட்ட அதே 16 விதமான சங்கதிகள். குறிப்பிட்ட சில நடிகர்களே திரும்பித்திரும்பி வெவ்வெறு படங்களில் நடிப்பது போன்ற ஒரே மாடல் ஓவியங்கள்.

விக்கிரமாதித்தன் கதையில் முன்னுரை தருவதுபோல 'தன் முயற்சியில் சற்றும் தளராமல்' இத்திருப்பணி தொடர்கிறது.

விக்கிரமாதித்தன் பேய்கதை போதாது என்று இதழுக்கு இதழ் ஆவிகளின் கதையொன்றும் வராமலிருப்பதில்லை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

அக்டோபர் '82 இதழ் முதல் கதையும், நவம்பர் 82 கடைசி கதையும் பிசாசு கதைகளே. "வேப்பமர உச்சியில் நின்னு பேய் ஒண்ணு ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லி வெப்பாங்க! வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக்கூட நம்பிவிடாதே!" என்று பட்டுக்கோட்டையார் பாடியது இவர்களுக்காகத் தானோ?

போட்டோ வாக்கியப் போட்டியைத் தவிர மூளையைத் தொடுகின்ற விஷயங்கள் இதில் ஏதும் இல்லை. மனபாரமின்றி லேசாக படிக்கும் நடை, பெரிய எழுத்தில் எளிய கதைப்போக்கு இவையே அம்புலிமாமாவின் வியாபார வெற்றிக்குக் காரணம்.

இதனால் அம்புலிமாமாவை குழந்தைகள் மட்டுமே படிப்பதில்லை. அதிகம் படிப்பறிவில்லா வயோதிக மாமிகள், குழந்தைதனமான பெரியவர்கள், படித்த மூளைசொகுசுக்காரர்கள் இவர்கள் நிறைய பேர் அம்புலிமாமாவை ஆசையாக படிக்கிறார்கள். கதை கேட்டு தொல்லை செய்யும் தங்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்லவும் சிலர் அம்புலிமாமா படித்து, அறியாமல் தங்கள் குழந்தைகளை மூளைச்சலவை செய்கிறார்கள். இப்படிப்பட்ட பாதி வாசகர்களை நம்பியே அம்புலிமாமா விற்பனை ஆகிறது.

எனவே தான் மன, உடல் வளர்ச்சிக்கான அறிவியல் கட்டுரைகளோ, உலகநாட்டு நடப்பை விளக்கும் அறிவார்ந்த கட்டுரைகளோ, சுயசிந்தனையை வளர்த்து பகுத்தறிவும் தன்னம்பிக்கையும் மிக்க குடிகளாக்கும் கதைகளோ இதில் வரவே வராது.

ராஜகுமாரர்களும், தேவதைகளும், பேய்களும் அரக்கர்களும் எவ்வளவு தூரம் எதார்த்தத்திலிருந்து குழந்தைகளை விரட்டுகின்றன. 'குழந்தைகளுக்குப் பூச்சாண்டி காட்டக்கூடாது பொய்க்கதைகள் சொல்லக்கூடாது' என்ற நவீன குழந்தை உளவியலுக்குக் களங்கம் விளைவிக்கிறது அம்புலிமாமா!

மசாலா பத்திரிகைகள் 'மக்கள் செக்சைத்தான் விரும்புகிறார்கள்' என்று சொல்வதற்கும், குழந்தை பத்திரிகைகள் 'குழந்தைகள் ராஜா ராணி கட்டுக் கதைகளைத் தான் விரும்புகிறார்கள்' என்று சொல்வதற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

கட்டுக் கதையாக இருந்தாலும் கூட சுய சிந்தனை, சமூக அறிவு இவற்றை புகுத்த முடியும். அம்புலிமாமாவோ தவறுகளையும், பிற்போக்குக் கருத்துக்களையும், தன் கனவுகளில் நியாயப்படுத்துகிறது. அண்மை இதழ்களில் சில சான்றுகள் கட்டலாம்:

☐ திறமையானவன் ராத்திருடனா! பகல் திருடனா! என்று திருட்டை ஒரு வீர சாகசமாகக் காட்டும் கதை: **உண்மை தானா அது:** அக்டோபர் 82-பக்: 59

☐ திருடன் திருத்த முடியாதவன் என்று அறிவுறுத்தும் கதை: **போ. போ. போய்விடு** ஜூன் 81-பக்:81

☐ திருட்டின் அடிப்படைக் காரணத்தை உணர்த்தாமல் திருடியவருக்குப் பாடம் கற்பிக்கும் கதை: **ஓடிப் போய் விடு** அக்டோபர் 82 பக் 43

☐ கஷ்டப்படாமல் புதையல் எடுத்து வறுமையைப் போக்கி கொள்ளலாம் என்று காட்டும் கதை; **போ! குழிக்குள்** நவம்பர்:82 பக் 39

வடபழனி அம்புலிமாமா தமிழ் நாட்டு குழந்தைகளோடு, பல்வேறு இந்திய மொழி பேசும் குழந்தைகளையும் வேறு பெயர்களில் (சந்தமாமா வெளியீட்டின் வேறு மொழி குழந்தைப் பத்திரிகைகள்) போய் தாவி பிடிக்கிறார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் தமிழ் நாடு எக்ஸ்பிரஸ் கிளம்பும் போது பார்த்தால் எத்தனை தமிழ், தெலுங்கு, ஹிந்தி வங்காளி, ஆங்கில மோக மாமாக்கள் தங்கள் சிறுவர்களுக்கு இவற்றை வாங்கித் தருகிறார்கள் என்பது புரியும்.

இந்தியாவின் மிகப்பெரிய விஜயா, வாஹினி சினிமா ஸ்டுடியோக்கள். மிக நவீன பிரசாத் பிராசஸ். பி என் கே அச்சுக் கூடம் இவற்றிற்குச் சொந்த காரர்களான நாகிரெட்டி சக்கரபாணி குடும்பமே அம்புலிமாமாவின் உரிமையாளர்கள். நிர்வாக ஆசிரியர் என்று நாகிரெட்டியின் பெயர் தான் அச்சில் வெளிவருகிறதே தவிர உண்மையாக சம்பளத்திற்கு இருக்கும் ஆசிரியர் பெயர் ஏதும் வெளிப்படுவதில்லை.

தனது விஜயா, வாஹினி கனவுத் தொழிற்சாலையிலிருந்து பாமரர்களுக்கு ஒரு பக்கம் திரைப்படங்களையும், மறுபக்கம் ராட்சஷ அச்சுக் கூடத்திலிருந்து பொம்மை, மங்கை ஆகிய ஆடம்பர பத்திரிகைகளையும் நடத்துபவர்களிடமிருந்து தான் குழந்தைகளின் அம்புலிமாமாவும் வெளிவருகிறது,

நம் குழந்தைகளை நோய் பசிப்பிணி இவற்றிலிருந்து மட்டுமல்ல, முருங்கை மர வேதாளமாகவும், ஒற்றைக் கண் மந்திரவாதியாகவும் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விடும் வியாபார அரக்கர்களிடமிருந்தும் மீட்க வேண்டிய அவசியம் உள்ளது! (அடுத்து: அண்ணா) —**ஆனந்தன், காஞ்சி**

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

# பெண்களுக்கு தாலி ஆண்களுக்கு?

திருமணமான பெண்கள் தால் அணிவது என்பது அந்த பெண்ணுக்கு திருமணம் ஆகிவிட்டது என்பதைக் காட்டுவதற்காக என்று வைத்திருக்கிறோம். ஆனால் ஆண்களுக்குத் திருமணமாகிவிட்டதைக்காட்ட எந்தவித அடையாளமும் இல்லை நியாயமாக ஆணுக்கும் திருமணமாகிவிட்டது என்பதைக் காட்ட ஏதாவது இருக்க வேண்டாமா!

திருமணம் ஆகிவிட்டதை காட்டுவதற்கென்று தோன்றிய தாலி அணியும் பழக்கம் நாளடைவில் தாலி என்பதை ஏதோ அதி அற்புத சக்தி வாய்ந்த ஒரு விஷயமாக மூட நம்பிக்கைக்குள்ளாக்கிவிட்டது. தாலியின் பின்னுள்ள கணவனை விட இந்த தாலி என்ற "டோக்கனே" அதிக மதிப்புள்ள ஒன்றாகிவிட்டது.


பொருந்தாதவனோ, விரும்பத்தகாதவனோ, விபத்தாகக் கூட இந்த தாலியை ஒரு பெண்ணின் கழுத்தில் கட்டும்படி சந்தர்பம் ஏற்பட்டுவிட்டால் அவன்தான் அவள் கணவன். அவனுடன்தான் அவள் வாழ்ந்து தீரவேண்டும் என்று மூவேழு லோகங்களிலும் தீர்ப்பாகிவிட்டதாக மூட நம்பிக்கையை ஏற்படுத்தி பெண்களுக்கு ஒரு தீராத சாபமாக்கிவிட்டார்கள். கதைகளும் காவியங்களும் தற்போதைய மக்களின் வாழ்க்கையின் பெரும் அங்கமாக உள்ள சினிமாக்களும் இந்த தாலி என்ற "டோக்கனை" ஏதோ சர்வசக்தி படைத்ததாக எந்த உலகின் எந்த சக்தியாலும் அசைக்க முடியாத மகிமை கொண்டதாக சித்தரித்து காட்டி விடுகின்றன.

போலியாக இந்த "டோக்கனை" பெரிதுபடுத்துவதைத் தவிர்த்து அதன் உண்மையான அர்த்தத்தை உணர்ந்துகொண்டு செயல்படுவது விவேகமல்லவா!

மேற்கண்டவை பற்றி ஏற்கனவே தீவிரமாக சிந்தித்த நண்பர் ஒருவர் தன் மனைவியின் புகைப்படத்துடன் தன் புகைப்படமும் பொறிக்கப்பட்ட டாலர் ஒன்றையும், மோதிரம் ஒன்றையும் தயாரித்தார். திருமணத்தன்று இந்த டாலரை தம் மனைவி கழுத்தில் நண்பர் அணிவிக்க அவர் மனைவி மோதிரத்தை நண்பர் கையில் அணிவித்தார். இதனால் மணமாகிவிட்டது மட்டுமன்றி யாருடன் மணமாகியுள்ளது என்பது தெரிவதும் நல்லதுதானே என்கிறார் அவர்.

—ஜெயராஜ்

# ஏழை நாடுகள் மால் தீவு




கன்னியாகுமரியிலிருந்து 500 கி.மீ. தொலைவில் இந்துமாக்கடலில் உள்ள அயல் நாடு மால் தீவு. இதன் 202 பவழத் தீவுக் கூட்டங்களில் 1,42,830 மக்கள் வசிக்கிறார்கள். 985 தீவுக்கூட்டங்களில் மனிதர்களே இல்லை.

இதன் மக்கள் தென்னிந்தியர்களைப் போன்ற முகச்சாயல் கொண்டவர்கள். இவர்கள் மொழியான தீவேகி, பழம்-சிங்கள மொழியுடன் தொடர்புடையது.

முஸ்லீம் நாடான மால் தீவில், இஸ்லாமியர்களுக்கு மட்டுமே குடியுரிமை உண்டு. கி.பி. 500 அளவில் இலங்கையிலிருந்து குடியேறிய பௌத்தர்களே இதன் பூர்வீகக் குடிகள்.

இப்போது இந்நாட்டின் குடியரசு தலைவர் மௌமூன் அப்துல் கேயூம். 1980இல் இந்நாட்டில் 1808 திருமணங்களும் அதே நேரத்தில் 1571 விவாகரத்துகளும் நிகழ்ந்துள்ளது குடும்ப வாழ்க்கை இங்கு சீராக இல்லாததைக் காட்டுகிறது. 1977 புள்ளி விவரப்படி 30 வயதிற்குமேற்பட்ட பாதி பெண்கள் 4 தடவைகளுக்கு மேல் மறுமணம் செய்துள்ளனர்.

இயற்கையான, எழில் கொஞ்சும் கடற்கரைகளும், நீல வானமும், தென்னை மரங்களும் வெளி நாட்டவரை கவர்ந்திழுக்கின்றன. ஆடம்பர ஓட்டல்களோ, அடுக்கு மாடி கடை வீதிகளோ, திரையரங்குகளோ, கேளிக்கைக் கூடங்களோ இல்லாத எளிய இயற்கை இந்த சுற்றுலாசொர்க்கத்தின் தனித் தன்மை! இயற்கையை இயற்கையாக அனுபவிக்க ஓட்டல்களில் ஏ.சி. கூட கிடையாது, இந்த ஏழைகளின் ஹாவாயில்!

இந்தியா இந்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவுக் கரம் தந்துள்ளது. தலைநகர் மாலேயில் அனைத்துலக விமான நிலையத்தையும் கட்டிக்கொடுத்துள்ளது.

இவ்வளவு நட்புடன் இந்தியா இருந்தபோதிலும் சென்ற மாதம் நடந்த தேசிய தின விழாவில் குடியரசு தலைவர் கேயூம், இந்தியாவுக்குச் சொந்தமான மினிக்காய் தீவின் மேல் மால்தீவுக்கு உரிமையிருப்பது போல பேசினார். பின்னால் இதை மறுத்து, மனத்தாபம் வரவிருப்பதைத் தவிர்த்த போதிலும் இது நம் நட்புறவில், சிறு விரிசலே! —உலகப்பன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

**படைப்புகள் அனுப்புவோர் கவனிக்கவும்:**

தயவு செய்து பிரதி எடுத்துக்கொண்டு அனுப்புக. வெளியிடாதவற்றைத் திருப்பி அனுப்ப அஞ்சல் தலைகள் இணைக்க வேண்டா. வெளியிடப்பட்டால் மட்டும் அறிவிக்கப்படும். சுட்டியின் அளவையும், தகுதியை மனதில் வைத்து சுருக்கமாக எழுதி அனுப்புக. வெளியிடமுடியாவிட்டாலும் வருத்தப்படாதவர்களாக படைப்பாளர்கள் இருக்க வேண்டும்.

சமுதாயப் பிரச்சனைகளைக் காட்டும் புகைப்படங்களும் வரவேற்கப்படுகின்றன.

**சுட்டி இம்மாதம் வரவில்லையா?**

சந்தா கட்டாததனால் நிறுத்தப்பட்டிருக்கலாம். சந்தா முடிய 1 மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும், ஆக இருமுறை அஞ்சல் உறையின் மேல் உங்களுக்கு நினைவுச் சீட்டு ஒட்டப்படுவதை கவனிக்க மறவாதீர்கள்!

சந்தா முடியக் காலமிருந்தும் 20ஆம் தேதிக்குள் கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (முடிந்தவரை), எழுதினால் மீண்டும் அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சல் தவறு நேர்வது தவிர்க்க முடியாமலிருக்கிறது.

**சுட்டியில் விளம்பரம்** செய்தால் சுமார் 1.50 லட்சம் பேர்கள் பார்வையில் படும் வாய்ப்பு உள்ளது. தமிழகத்தின் பல்வேறு மூலை முடுக்குகளிலும், பல்வேறு வயதினரையும் எட்ட சுட்டியில் விளம்பரம் செய்க. விளம்பர கட்டண விவரங்களுக்கு எழுதுக:- விளம்பரத்துறை, சுட்டி, 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**கழிப்பிடமில்லா ஊர்:** கும்பகோணம் வட்டத்தைச் சேர்ந்த நாச்சியார் கோவிலில் பொதுக் கழிப்பிட வசதியே இல்லை. ஊர் ஒதுக்குபுற திடலில் தான் அனைவரும் காலைக் கடன்களை முடிப்பர். ஆனால் வளர்ந்துவரும் இவ்வூரில் அங்கேயும் கட்டடங்கள் தோன்றி மக்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கின்றது. பித்தளைப் பாத்திரங்கள் குத்துவிளக்குகள் செய்தல், மெழுகு வர்த்தி, சேமியா, சோடா, ரொட்டி போன்றவை தயாரிக்கும் தொழில்கள் இங்கு நடப்பிலும் ஒரு கழிப்பிடம் இல்லாதது மிக மோசமான நிலை. 10,000 மக்கள் உள்ள இவ்வூரில் பொதுக்கழிப்பிடம் அமைக்க அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

ஜி. ஞானசேகரன், நாச்சியார் கோவில்

- ☐ சுட்டி இனி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதியன்றே** வெளிவரும்.
- ☐ சுட்டி-23, அடுத்த இதழ் வெளிவரும் நாள்: 1—1—1983.
- ☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ. 5-00
- ☐ அடுத்த இதழ் முதல் தனிப்பிரதி 50 காசு.
- ☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, **'சுட்டி'**.

1494, அண்ணா நகர், சென்னை-600 040

**சுட்டி முன் இதழ்களைப் படிக்கவில்லையா?**

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும் - அறிவூட்டும் சரியாக பிரச்சனைகளைப் பார்க்க துணைபுரியும். முன் இதழ்களை சேமியுங்கள். படிக்காதவர்களுக்கு வழங்கி பயன்படுத்துங்கள். தற்போது இதழ் எண்: 5 முதல் 20 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு விதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை [M.O.] அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள் தேவை:** சுட்டி இன்னும் கடைகளில் விற்பனையாகாத எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க. சுட்டியின் வளர்ச்சியிலும், கொள்கையிலும் ஆர்வம் கொண்டோரை சிறப்பாக இப்பணிக்கு நோக்குகிறோம்.

**'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்**

"சுட்டி" யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக்கொடுத்து அறிமுகப் படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010




ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: J.S. கிட்டாஜ் ஷா. கிருஷ்ணா பிரிண்டர்ஸ், 35 பப்பை தெரு, சென்னை-600 002.

1875 / Dec. 2010
http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்ச்சுரங்கம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010

[illegible] Regd. No. TN/MS(N)/[illegible]
Licensed to post without prepayment   Licence No: TN/MS(N)WPP-[illegible]



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary. secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E BOOKS - www.thamizham.net - TM1875 / Dec 2010